பக்கங்கள் 18 + 03

# மாலை முரசு

## இலங்கை சினிமாவின் ராணி காலமானார்!



இலங்கை சினிமாவின் ராணி என அறியப்பட்ட பிரபல நடிகை மாலினி பொன்சேகா (வயது 76) இன்று காலமானார். 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 10 சனிக்கிழமை 24.05.2024 | அதிர்வு 294

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# எந்தவொரு சூழ்ச்சியாலும் அரசைக் கவிழ்க்க முடியாது!

## ஆட்சியைப் பிடிக்கலாம் என்று எதிரணியினர் பகல் கனவு காணக்கூடாது என்கிறார் பிரதமர்



"இது தேசிய மக்கள் சக்தி அரசு. மூவின மக்களாலும் உருவாக்கப்பட்ட அரசு. எனவே, எந்தவொரு சூழ்ச்சியாலும், வதந்திச் செய்திகளாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது."

- இவ்வாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசுக்குள் குழப்பம் என்றும், பிரதமர் தலைமையிலான ஒரு குழு அரசில் இருந்து வெளியேறுகின்றது என்றும், அநுரவின் ஆட்சி கவிழப் போகின்றது என்றும் தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் கருத்துரைக்கும்போதே பிரதமர் மேற்கண்டவாறு கூறினார். 04

## கொழும்பு மாநகரை என்.பி.பியே ஆளும்

### ரில்வின் சில்வா திட்டவட்டம்



"ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே கொழும்பு மாநகர சபையை ஆட்சி செய்யும்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும், ஜே.வி.பியின் பொதுச் செயலாளருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் தேசிய மக்கள் 03



### தங்க முலாம் பூசப்பட்ட ரி – 56 துப்பாக்கி விவகாரம்:

## முன்னாள் அமைச்சர் துமிந்த மே 29 வரை விளக்கமறியலில்

கொழும்பு, வெள்ளவத்தையில் தங்கமுலாம் பூசப்பட்ட ரி – 56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் இன்று சனிக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

பம்பலப்பிட்டி பகுதியில் உள்ள ஒரு வீட்டு வளாகத்தில் தங்கியிருந்தபோது, முன்னாள் அமைச்சர் 03

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally





# பூநகரியில் அரச காணியில் அத்துமீறல்: தடுக்கச் சென்றவர்களுக்கு மிரட்டல்!

(எஸ்.நிதர்ஷன்)

கிளிநொச்சி, பூநகரி பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் சட்ட விரோதக் கடைகளை அகற்றச் சென்ற பூநகரி பிரதேச சபை செயலாளர் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவிக்கப்பட்டமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணம் – மன்னார் பிரதான வீதியில் நாச்சிக்குடா சந்திக்கு அருகாமையில் உள்ள அரச காணிகளுக்குள் நேற்று வியாழக்கிழமை இரவு அனுமதியற்ற முறையில் தற்காலிக கடைகள் கட்டப்பட்டுள்ளன. அவற்றில் சில இரும்பினால் ஒட்டப்பட்ட கடைகளாகவும் காணப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தகவல் அறிந்த பிரதேச சபை செயலாளர், வருமான வரி பரிசோதகர் உள்ளிட்ட அரச உத்தியோகத்தர்கள் குறித்த இடத்துக்குச் சென்று அனுமதியற்ற கடைகளை உடனடியாக அகற்ற வேண்டும் என அறிவுறுத்தியுள்ளனர். அத்துடன் அது தொடர்பான அறிவித்தல்களையும் கடைகளில் ஒட்டியுள்ளனர்.

அந்நேரம் , கும்பல் ஒன்று, அரச உத்தியோகத்தர்களின் கடமைகளுக்கு இடையூறு விளைவித்ததுடன், அவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டு, அவர்களைக் காணொளி எடுத்துள்ளார்கள்.

அதேவேளை, பூநகரி பிரதேச சபை எல்லைக்குள் சட்டவிரோத கட்டுமானப் பணிகள், அரச காணிகளில் அத்துமீறிய செயற்பாடுகள் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பூநகரி பிரதேச சபை செயலாளர் ரத்தினம் தயாபரன் தெரிவித்துள்ளார்.



# 270 போதை மாத்திரைகளுடன் இளைஞர்கள் இருவர் சிக்கினர்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் 270 போதை மாத்திரைகளுடன் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் இன்று கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சமன் பிரேமதிலகவின் வழிநடத்தலின் கீழ் உப பொலிஸ் பரிசோதகர் நந்தகுமாரின் தலைமையில் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் 18 மற்றும் 24 வயது மதிக்கத்தக்க மணியந்தோட்டம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.



# உணவக உரிமையாளர் வாளால் வெட்டிக்கொலை

## இரண்டு சந்தேகநபர்கள் கைது

உணவகம் ஒன்றின் உரிமையாளர் வாளால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு – எத்துகால பகுதியில் அமைந்துள்ள உணவகம் ஒன்றின் உரிமையாளர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே மேற்படி இரண்டு சந்தேகநபர்களும் நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 19 மற்றும் 23 வயதுடைய நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களிடமிருந்து ஐஸ் போதைப்பொருள், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் மூன்று தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் கொலைச் சம்பவத்துக்குப் பயன்படுத்தப்பட்ட வாள் வென்னப்புவை – நைனாமடு பகுதியில் இருந்து கொண்டுவரப்பட்டது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியே அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது. எனவே, தேசிய மக்கள் சக்தியே கொழும்பு மாநகர சபையை ஆளும். அதேவேளை, அங்கு பல கட்சிகள், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்கு நேரடியாக ஆதரவைத் தெரிவித்தும் வருகின்றன. முதலாவது சபை அமர்வில் தேசிய மக்கள் சக்தியின் மேயர் பதவியேற்பார்.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபையில் தாம்தான் ஆட்சி அமைப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் வீரவசனம் பேசி வருகின்றனர். சஜித் அணியினரின் இந்த வீரவசனம் செல்லுபடியாகாது. கடந்த மூன்று தேர்தல்களிலும் இப்படித்தான் அவர்கள் வீரவசனம் பேசி படுதோல்வியடைந்தனர்." – என்றார்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று காலை கைது செய்யப்பட்டார்.

கடந்த செவ்வாய்க்கிழமை, கொழும்பில் உள்ள வீட்டு வளாகத்தில் வசிக்கும் ஒரு பெண்ணிடம் இருந்து தங்க முலாம் பூசப்பட்ட ரி – 56 துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டது.

அதன்படி, வெள்ளவத்தை பொலிஸார் 69 வயதான அந்தப் பெண்ணையும், அவரது மருமகளையும் கைது செய்து நீண்ட நேரம் விசாரித்தனர்.

அவர்கள், சம்பந்தப்பட்ட துப்பாக்கி பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று பொலிஸாரிடம் கூறினர்.

பின்னர் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இருப்பினும், துப்பாக்கி எப்படி கிடைத்தது என்பது குறித்து விசாரணை நடத்தத் தொடங்கிய பொலிஸார், அது தொடர்பான பல முக்கியமான உண்மைகளைக் கண்டுபிடித்தனர்.

இதன்போதே முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க இந்தத் தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கியுடன் நேரடி தொடர்பு வைத்திருப்பது தெரியவந்தது. இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில் சந்தேகநபரான முன்னாள் அமைச்சர், ஆறு மாதங்களுக்கு முன்பு தனது சமையல்காரர் மூலம் தனது நண்பரான பெண் ஒருவரின் வீட்டுக்கு இந்தத் துப்பாக்கியை அனுப்பியுள்ளார் என்பதைப் பொலிஸார் கண்டுபிடித்தனர்.

ஆயுதம் அடங்கிய பையில் ரி – 56 துப்பாக்கி இருப்பதை அறியாமலேயே அவர் அதை ஏற்றுக்கொண்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட விசாரணைகளில், இந்த ரி – 56 துப்பாக்கி, பாகங்களை ஒன்று சேர்த்து தயாரிக்கப்பட்ட ஆயுதம் என்பது தெரியவந்தது.

இதற்கிடையில், குறித்த துப்பாக்கி தொடர்பான வழக்கு நேற்று கல்கிஸை நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இரண்டு பெண் சந்தேகநபர்களையும் ஜூன் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் தரங்க டி சில்வா உத்தரவிட்டார்.

அத்துடன் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நான்கு அதிகாரிகளுக்கு, சிறையில் உள்ள இரண்டு சந்தேகநபர்களிடம் இருந்து மேலும் எழுத்து மூலமான வாக்கு மூலங்களைப் பதிவு செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட துமிந்த திஸாநாயக்கவின் சமையல்காரரும் ஜூன் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

துமிந்த திஸாநாயக்க இன்றைய கல்கிஸை நீதவான் நீதிமன்றத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் சிகிச்சைப் பெற்றுவந்த நிலையிலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

1968 இல் திஸ்ஸ லியன்சூரியவின் "புஞ்சி பபா" என்ற திரைப்படத்துடன் சினிமாப் பயணத்தை ஆரம்பித்தார். ஆறு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கை சினிமாவில் ஆதிக்கம் செலுத்தினார்.

2010 ஆம் ஆண்டில், ஆசியாவின் 25 சிறந்த திரைப்பட நடிகர்களில் ஒருவராக சி.என்.என் ஊடகத்தால் பெயரிடப்பட்டார்.

1978 ஆம் ஆண்டு பைலட் பிரேம்நாத் தமிழ்த் திரைப்படத்தில் சிவாஜி கணேசனுடன் இணைந்து கதாநாயகியாக நடித்துள்ளார். மேலும் சில தமிழ்ப் படங்களிலும் நடித்துள்ளார். தேசிய மற்றும் சர்வதேச விருதுகளையும் அவர் வென்றுள்ளார். இலங்கையின் சினிமாத் துறைக்கு இவர் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் வகையில், தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம்கூட அனுப்பப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நல்லூர் ஆலயச் சூழலில் அனுமதியின்றி அமைக்கப்பட்டுள்ள பன்னாட்டு நிறுவனத்தை மூடுவதற்கு நடவடிக்கை எடுங்கள்

## ஆளுநரிடம் தமிழ்ச் சைவப்பேரவையினர் மனு



நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சூழலில் எந்தவொரு அனுமதியும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ள பன்னாட்டு நிறுவனத்துக்கு எதிராக அதனை மூடுவதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும், சட்டவிரோத உணவகம் அமைக்கப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்காத யாழ். மாநகர சபையின் செயற்பாடு தொடர்பில் விசாரணைக் குழு அமைக்குமாறும் தமிழ்ச் சைவப்பேரவையினர் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனைச் சந்தித்து வலியுறுத்தி மனுவைக் கையளித்தனர்.

வடக்கு மாகாண ஆளுநருக்கும் தமிழ்ச் சைவப்பேரவையினருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் இன்று சனிக்கிழமை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின்போது பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

முதல் கட்டமாக யாழ். மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட நல்லூர் ஆலயச் சுற்றாடலில் மதுபான கேளிக்கை வர்த்தக நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படக் கூடாது எனவும், அதை சிவ புண்ணிய பிரதேசமாக மாநகர சபை வர்த்தமானி ஊடாக அறிவிப்பதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர். இதையே ஏனைய உள்ளூராட்சி மன்றங்களும் பின்பற்றி தமது ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள ஆலய நிர்வாகங்களுடன் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுப்பதற்குரிய அறிவுறுத்தல்களையும் வழங்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

மேலும் மேற்படி உணவகம் பன்னாட்டு நிறுவனம் என்ற அடிப்படையில் இலங்கையின் சட்டம் தொடர்பாக முழுமையாக அறிந்து வைத்திருப்பார்கள் எனவும், அவர்கள் நல்லூரில் தமது நிறுவனத்தின் கிளையை எந்தவொரு அனுமதியையும் பெற்றுக்கொள்ளாது திறந்தமை திட்டமிட்ட நடவடிக்கை எனவும் சுட்டிக்காட்டிய தமிழ்ச் சைவப் பேரவையினர், இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபையின் அலுவலர்களுக்கு தொடர்பு உள்ளதா என்பது தொடர்பாகவும், அனுமதியற்ற வர்த்தக நிறுவனத்துக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படாமை தொடர்பிலும் விசாரணைக்குழு அமைத்து விசாரணை முன்னெடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இளைய சமூகத்தை வழிப்படுத்தும் வகையில் அறநெறிக் கல்வியை கட்டாயமாக்குவதற்கான யோசனை தொடர்பிலும் தமிழ்ச் சைவப்பேரவையினர் சுட்டிக்காட்டினர். குறிப்பாக, 14 வயதுக்கு உட்பட்டோருக்கான அனைத்து தனியார் கல்வி செயற்பாடுகளையும் வெள்ளி மாலையும், ஞாயிறு மதியம் வரையிலும் மூடுவதற்கு உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாக வர்த்தமானி மூலம் அறிவித்தல் விடுத்து நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரினர். அத்துடன் அறநெறி வகுப்புக்கு மாணவர்கள் செல்வதை உறுதிப்படுத்தி ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களின் அறநெறி வகுப்புக் கான வருகை மற்றும் செயற்பாடுகளை கட்டாயக் கல்வியின் ஒரு பகுதியாக இணைத்துக்கொள் வதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத் தனர்.

சில பாடசாலைகளில் மாணவர்களை சைவச் சின்னங்கள் அணிந்து செல்வதை தடைவிதிக்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன என ஆதாரங்களுடன் தமிழ்ச் சைவப்பேரவையினர் ஆளுநரிடம் முறையிட்டனர்.

தமிழ்ச் சைவப் பேரவையினரின் கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதாக ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

# வாகன விபத்தில் 21 வயது இளைஞர் பரிதாப மரணம்!

வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து கம்பஹா மாவட்டம், மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யக்கல – கிரிந்திவெல வீதியில் வாரபலான பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கிரிந்திவெலவிலிருந்து யக்கல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று எதிர்த்திசையில் பயணித்த பஸ்ஸூடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிள் பயணித்த இருவரும் பலத்த காயமடைந்து கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மோட்டார் சைக்கிளின் செலுத்துனர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பூகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவர் ஆவார்.

இதனையடுத்து பஸ் சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## எந்தவொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இது ஜனநாயக நாடு. மக்கள் ஆணையை மீறி எவரும் நடக்க முடியாது. மக்களை ஏமாற்றி எவரும் அரசியல் பிழைப்பு நடத்த முடியாது. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து அரசு நடக்க வேண்டும். இதை மீறி நடந்த கடந்த ஆட்சியாளர்களுக்கு மக்கள் புகட்டிய பாடத்தை எவரும் மறக்கமாட்டார்கள்.

அந்தவகையில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சி , மக்களின் அமோக ஆணையுடன் ஆட்சிக்கு வந்தது. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நாம் செயற்படுகின்றோம். மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகின்றோம்.

இந்நிலையில், குறுக்கு வழியில் ஆட்சியைப் பிடிக்க எதிரணியினர் பகல் கனவு காண்கின்றனர். பகல் கனவு ஒருபோதும் நனவாகாது என்பதை அவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, தேசிய மக்கள் சக்திக்குள் குழப்பம் என்றும், எமது ஆட்சி கவிழப் போகின்றது என்றும் எதிரணியினருக்குச் சார்பான ஊடகங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. இந்த வதந்திச் செய்திகளை நம்பும் அளவுக்கு மக்கள் முட்டாள்கள் அல்லர். ஊடகங்கள் நடுநிலையுடன் செயற்பட வேண்டும். இது தேசிய மக்கள் சக்தி அரசு. மூவின மக்களாலும் உருவாக்கப்பட்ட அரசு. எனவே, எந்தவொரு சூழ்ச்சியாலும், வதந்திச் செய்திகளாலும் இந்த அரசைக் கவிழ்க்க முடியாது.” – என்றார்.



# தமிழின அழிப்பு விவகாரத்தில் கனடாவின் ஆதரவுக் கரங்கள்!



## இறுகப் பற்றிக் கொள்கிறோம்!! நீதியைப் பெற்றுத் தாருங்கள்!!!

### ரவிகரன் எம்.பி. தெரிவிப்பு

(விஜயரத்தினம் சரவணன்)

முள்ளிவாய்க்கால் தமிழ்இனப் படுகொலை விவகாரத்தில், தமிழர் தரப்புக்கு கனடா ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், கனடாவின் ஆதரவுக் கரங்களை இறுகப் பற்றிக் கொள்வதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முள்ளிவாய்க்கால் 16 ஆம் ஆண்டு நினைவேந்தலுக்கு இரங்கல் தெரிவித்தமை, இனப்படுகொலை விவகாரத்தில் தமிழர் தரப்புக்கான ஆதரவு நிலைப்பாடு என்பவற்றுக்காகக் கனேடியப் பிரதமர் மார்க் கார்னிக்கு பாதிக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக நன்றி தெரிவித்துள்ளார். கனடாவில் தமிழ் இனப்படுகொலைத் தூபிஅமைத்தமைக்கு பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுணுக்கும் தனது நன்றிகளைத் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று (23) கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்கவேண்டும் எனக் கோருகின்றேன். முள்ளிவாய்க்கால்தமிழினப்படுகொலை இடம்பெற்று ஒன்றரை தசாப்தகாலம் கடந்திருக்கின்றது. பதினாறு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது.

இத்தகைய சூழலில் கடந்த 2009 ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் தமிழ் இனப் படுகொலை என்னும் பேரவலத்தை - நெருப்பாற்றை கடந்து எஞ்சிய உறவுகள் இறுதிப் போரின் வடுக்களோடும், போரின் கொடுமையான நினைவுகளைச் சுமந்தும் இறுதிப் போரின் சாட்சியாக, தமிழ் இனப் படுகொலையின் ஆதாரங்களாக எமது மண்ணில் வாழ்ந்து வருகின்றனர்.

தமக்கு மேற்கொள்ளப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவேண்டும், தமிழினப் படுகொலையை மேற்கொண்டவர்களுக்கும், துணை நின்றவர்களுக்கும் உரிய தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது எமது உறவுகளின் எதிர்பார்ப்பாகவுள்ளது.

இருப்பினும் தமிழினப் படுகொலை இடம்பெற்று ஒன்றரைத் தசாப்த காலங்கள் கடந்துவிட்ட போதிலும் எமது மக்களுக்கு நீதி கிடைக்கவில்லை. எமது மக்களுக்கு அநீதி இழைத்தவர்கள் மற்றும், அநீதி இழைப்பதற்குத் துணை நின்றவர்களுக்கு தண்டனை வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் வருடந்தோறும் மே-18 அன்று, எமது உறவுகள் தமிழினப் படுகொலையை நினைவு கூருகின்றனர். இதன் மூலம் தமிழினப் படுகொலைக்கான நீதியைக் கோருகின்றனர். அத்தோடு தமிழினப் படுகொலையை மேற்கொண்டவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர். இவ்வாறாக கடந்த 16 ஆண்டுகளாக எம் உறவுகள் நீதியை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

இத்தகைய சூழலில்தான் கனடாவின் பிரம்டன் நகரத்தில் சிங்கௌசி பூங்காவில், தமிழ்இனப் படுகொலையை நினைவுகூரும் வகையிலான தமிழ் இனஅழிப்பு, நினைவுத் தூபி கடந்த 10 ஆம் திகதி பிரம்டன் நகரத்தின் மேயர் பற்றிக் பிரவுணால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிலையில் 16 ஆண்டுகளாக தமிழ் இனப் படுகொலைக்கான நீதியைக் கோரிக் கொண்டு, காத்துக் கொண்டிருக்கும் எமது பாதிக்கப்பட்ட உறவுகளுக்கு கனடாவின் இந்தச் செயற்பாடு புதிய தெம்பைத் தருவதாக அமைந்துள்ளது. நீதி கிடைக்குமா? என்று ஏங்கியிருக்கும் எமது உறவுகளுக்கு ஒரு நம்பிக்கையைத் தருவதாக உள்ளது.

இந்த நிலையில் 16 ஆம் ஆண்டு நினைவேந்தலுக்கு கனேடியப் பிரதமர் மார்க் கார்னி இரங்கல் தெரிவித்துள்ளார். தமிழ் சமூகத்தின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு எமது துயரில் பங்கேற்று ஆறுதல் சொன்ன கனேடியப் பிரதமர் மார்க் கார்னிக்கு வலிசுமந்த மக்களின் பிரதிநிதியாக இந்த உயரிய சபையில் தலைசாய்த்துக் கொள்கின்றேன்.

மேலும் தமிழ் இனப்படுகொலைக்குக் காரணமானவர்களை பொறுப்பேற்கச் செய்வதிலும், உண்மை, நீதி கிடைப்பதற்கும் சர்வதேச அளவிலான முயற்சிகள் மற்றும், நடவடிக்கைகளுக்கு கனடா தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்ற செய்தியானது அவலத்தில் இருந்து மீண்ட எமது மக்களை பேரூதல் அடையச் செய்கின்றது.

கனடாவின் ஆதரவுக் கரங்களை இறுகப் பற்றிக்கொள்கின்றோம். எமது மக்களுக்கான நீதியைப் பெற்றுத் தாருங்கள் என இந்த உயரிய சபையிலிருந்து கனேடியப் பிரதமர் மார்க் கார்னியிடம் எம் மக்கள் சார்பாகக் கோரிக்கை விடுக்கின்றேன்.

தமிழ் இன அழிப்பு விடயத்தில் கனடா எமக்கு ஆதரவுக் கரம் நீண்டியதை வரவேற்பதுடன், கனேடியப் பிரதமர் மார்க் கார்னிக்கும், பிரம்டன் நகரமேயர் பற்றிக் பிரவுணுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளை மீண்டும் மீண்டும் தெரிவித்துக்கொள்கின்றேன். - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இழி செயல் நாடு

இலங்கையில் யுத்தத்தின்போது இனப்படுகொலை இடம்பெற்றதாகக் குறிப்பிடுபவர்களுக்கும் குற்றஞ்சாட்டு பவர்களுக்கும் எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை வெளிவிவகாரத்துறை அமைச்சர் விஜித ஹேரத் சிங்களத் தொலைக்காட்சிப் பேட்டி ஒன்றில் கூறியிருக்கின்றமை நகைப்புக்கிடமான கருத்து. இது வேடிக்கையானது. கேலிக் கூத்தான மனநிலையை இந்தக் கூற்று வெளிப்படுத்துகின்றது.

- இப்படி நாடாளுமன்றத்தில் வெளி விவகாரத்துறை அமைச்சரை நேற்று வெள்ளிக்கிழமை ஒரு பிடி பிடித்திருக் கின்றார் தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் என்பவர் நாட்டின் சார்பில் சர்வதேசத் துக்கும் பதில் சொல்ல வேண்டிய மிக முக்கிய பொறுப்பில் இருப்பவர். ஆகவே, அத்தகையவர் இவ்வாறான கருத்துக்களை பொறுப்பற்றவராகத் தெரிவித்திருக்கக் கூடாது எனச் சுட்டு கின்றார் கஜேந்திரகுமார்.

''இனப்படுகொலை என்பது ஒரு பெருங்குற்றம். முதலில் அந்தக் கொடூ ரம், பெருங்குற்றம் என்பதை ஏற்று அங்கீகரிக்கும் முதுகெலும்பு ஒரு நாடாக இலங்கைக்கு இல்லை என்பதை அம்பலப்படுத்த விரும்புகின்றேன். அதனால்தான் அந்தக் கொடூரத்தைப் பெருங்குற்றமாக ஏற்று, அத்தகைய விடயங்களை விசாரிக்க வலியுறுத்தும் ரோம் உடன்படிக்கைக்கு உடன்பட நீங்கள் மறுத்து நிற்கின்றீர்கள். அந்த யதார்த்தத்தில் இருந்து நீங்கள் ஓடி ஒளிக்க முயலுகின்றீர்கள். ஏன் என்றால் இது விடயத்தில் நீங்கள் அதிகம் அஞ்சுகின்றீர்கள். நீங்கள் இந்த ரோம் உடன்படிக்கையை ஏற்று அதற்கு இணங்க ஒப்புக் கொண்டால் நீங்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திடம் மாட்டிக் கொள்வீர்கள் எனப் பயப்படு கின்றீர்கள். ரோம் உடன்படிக்கையில் கையெழுத்திடாவிட்டாலும், இனவ ழிப்பை இந்த நாட்டில் ஒரு குற்றமாக அறிவித்தால் நாட்டில் வழக்கு தொடுநர் தரப்பு சுயாதீனமாக - சுதந்திரமாக - இயங்கும் நிலை வரும் போது உங்க ளுக்கு எதிராக குற்ற நடவடிக்கை எடுக் கப்படும் என்ற பயத்தினால் இனவ ழிப்பை ஒரு குற்றமாக அறிவிக்க நீங்கள் அஞ்சுகிறீர்கள். அதற்கான முதுகெலும்பு - துணிச்சல் - உங்களுக்கு இல்லை என்பதை வெளிப்படையாக தெரிவிக்கி றேன்.'' - என்று நாடாளுமன்றத்தில் அரசின் மீது பட்டவர்த்தனமாக குற்றம் சுமத்தி போட்டுப் பிடித்திருக்கின்றார் அவர்.

இந்த நாட்டில் இனவழிப்பை ஒரு குற்றமாக அறிவிக்க திராணியில்லாத இந்த அரசு, அத்தகைய குற்றம் இழைக் கப்பட்டதான குற்றச்சாட்டுகளை சுமத்த முற்படுபவர்களை, அது நல்லிணக்கம் ஏற்படுவதைப் பாதிக்கச் செய்யும் முயற்சி என்று கூறி, சட்டரீதியாகத் தண் டிக்க முற்படுவது என்பது மிகவும் கேலிக்கிடமானது. பொறுப்பற்றது. முட்டாள்தனமானது. அதுவும் சர்வதே சத்திற்குப் பதிலளிக்க வேண்டிய வெளி விவகார அமைச்சர் பதவியில் இருக் கின்ற ஒருவர் இப்படி மிரட்ட முயல்வது மிக அற்பத்தனமானது.

மனித நாகரிகத்துக்கு - மனித பண்பு களுக்கு - ஒவ்வாத காட்டுமிராண்டித்தன மான இனப்படுகொலைப் போக்கை - இனவழிப்புக் கொடூரத்தை - ஒரு குற்றமாக ஏற்றுக்கொள்ளத் திராணியே இல்லாத ஒரு நாடு, அத்கையை குற்றம் இழைக்கப்பட்டதாக குற்றம் சுமத்து வதையே ஒரு பெரும் தவறாக - குற்றமாக மாற்ற முற்படுவது கேவலமானதாகும். ஒரு நாடு என்ற அங்கீகாரத்துக்கே தக மையற்ற இழி செயல் முயற்சி அது.

# மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியாக கணேசரெத்தினம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதியாக தர்மரெத்தினம் கணேசரெத்தினம் நியமிக்கப்பட்டார்.

2023 இல் மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரிக்கு பதில் பீடாதிபதியாக நியமிக்கப்பட்ட தர்மரெத்தினம் கணேசரெத்தினம் தற்போது பொதுச் சேவை ஆணைக் குழுவின் நிரந்தர நியமனம் பெற்றுள்ளார். கடந்த வாரம் அவனுக்கான நியமனக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்றைச் சேர்ந்த கணேசரெத்தினம் இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவையில் முதல்தர அதிகாரி ஆவார்.

அவரது நிரந்தர நியமனத்தை வாழ்த்தி வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கல்லூரியில் நடைபெற்றது.



# ‘விருத்தப் பாமழை ஆயிரம்’ கவிதை நூல் வெளியீடு!

அமலமரித் தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்பணியாளர் செ.அன்புராசா அடிகளாரின் ‘ விருத்தப் பாமழை ஆயிரம்’ என்ற கவிதை நூலின் வெளியீடு நாளை (25) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இல. 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் சி. சிவலிங்கராஜாவும், சிறப்பு விருந்தினராக கவிஞர் சோ. பத்மநாதனும், கௌரவ விருந்தினர்களாக யாழ். மாகாண அ.ம.திகளின் முதல்வர் அருட்பணி போல் ஜெயந்தன் பச்சேக், யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்பணி ப.யோ. ஜெபரட்ணம், திருக்குடும்ப கன்னியர்மட யாழ். மாகாண முதல்வர் அருட்சகோதரி தியோபின் குரூஸ் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் நூல்களுக்கான மதிப்பீட்டுரைகளை கவிஞர் ந. வடிவழகையன், திருமதி மேரி மெக்டலீன் ஜெயக்கொடி ஆகியோர் வழங்குவர்.




ஏற்புரையை நூலாசிரியர் செ. அன்புராசா (அ.ம.தி.) வழங்குவார்.




# நல்லூர் ஆலய சூழலில் சர்ச்சையாக இருந்த அசைவ உணவகம் சைவ உணவகமாகியது!

யாழ்ப்பாணம், நல்லூர் ஆலய சூழலில் புதிதாக திறக்கப்பட்ட அசைவ உணவகம் தற்போது சைவ உணவகமாக மாற்றப்பட்டுள்ளது.

அந்தவகையில் அங்கு சைவ உணவுகள் பரிமாறப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த உணவகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பரப் பலகையில் “சைவ உணவுகள் மாத்திரம் பரிமாறப்படும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ். நல்லூர் ஆலய வீதியில் திறக்கப்பட்ட அசைவ உணவகத்தின் முன்னால் வைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற விளம்பரப்பலகை யாழ். மாநகர சபையால் அகற்றப்பட்டமை தெரிந்ததே.

இதேவேளை, யாழ்ப்பாணம் – நல்லூர் கந்தசுவாமி கோயில் அருகே திறக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூடுமாறு வலியுறுத்தி ஆலய பக்தர்களிடம் சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

கையொப்பங்கள் அடங்கிய மகஜர் யாழ். மாநகர சபை அலுவலகத்தில் வைத்து மாநகர சபை ஆணையாளர் கிருஷ்ணேந்திரனிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது சிவகுரு ஆதீனத்தின் தவத்திரு வேலன் சுவாமிகள் உள்ளிட்ட சைவ சமய ஆர்வலர்கள் பங்கேற்றனர்.

இந்த மகஜரின் பிரதிகள் வடக்கு மாகாண ஆளுநர், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர், நல்லூர் பிரதேச செயலாளர், இந்து கலாசார திணைக்கள பணிப்பாளர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# உரக் கூட்டுத்தாபனத்தின் கட்டடத்தில் பனை சார்ந்த உற்பத்தி நிலையம்!

## பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சகாதேவன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

தென்மராட்சி, வரணிப் பகுதியில் நீண்ட காலமாக பயன்பாடற்ற நிலையில் காணப்படும் இலங்கை உரக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் பனை சார்ந்த உற்பத்தி மற்றும் விற்பனை நிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை பனை அபிவிருத்திச் சபை முன்னெடுத்து வருகிறது என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் வி.சகாதேவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்மராட்சி வரணிப் பிரதேசத்தில் இலட்சக் கணக்கான பனை மரங்கள் இருந்தும் அவை முழுமையாக உற்பத்திக்குப் பயன்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றது.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி இணைப்பாளர் பிரகாஷ் மற்றும் வரணி முதலாம் வட்டார பிரதேசசபை உறுப்பினர் ஞான நிரோஜன் ஆகியோர் அரச வளங்களை உச்ச பயன்பாட்டுக்கு உட்படுத்தல் எனும் தேசிய கொள்கைக்கு அமைவாக மேற்படி உரக் களஞ்சியத்தை பனை அபிவிருத்திச்சபைக்கு அடையாளம் காட்டியிருந்தனர்.

தற்போது பனைசார்ந்த உற்பத்திப் பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பு அதிகமாக காணப்படும் நிலையில் பயன்படுத்தப்படாத உரக் களஞ்சியத்தை பனை சார்ந்த உற்பத்தி மற்றும் விற்பனை நிலையமாக மாற்ற பனை அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன் அடிப்படையில் தேசிய உரக் கூட்டுத்தாபனத் தலைவருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக அதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய அனுமதியுடன் முதலீட்டாளர்களுடைய பங்களிப்புடன் கட்டடத்தை புனரமைத்து மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டுள்ளோம்.

இந்த நடவடிக்கை மூலம் வரணிப் பிரதேசத்தில் உள்ள பனை வளங்களை முழுமையாக பயன்படுத்த முடியும்.

அத்துடன் வரணிப் பிரதேச இளைஞர்கள் மற்றும் பெண்கள் ஆகியோர் தொழில் வாய்ப்புக்களைப் பெற முடியும் எனவும் மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# கொழும்பு மாநகர சபையில் எமது ஆட்சி உறுதி

## தேசிய மக்கள் சக்தி தெரிவிப்பு

“கொழும்பு மாநகர சபையில் நாம் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டோம். இது தொடர்பில் அதிகாரபூர்வ அறிவிப்பை மாத்திரமே வெளியிட வேண்டியுள்ளது.”

– இவ்வாறு அமைச்சர் லால் காந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையில் எதிரணியே ஆட்சியமைக்கும் எனக் கூறப்பட்டு வரும் நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதற்குரிய பெரும்பான்மைப் பலத்தை உறுதிப்படுத்திவிட்டோம். அதிகாரபூர்வமற்ற வகையில் ஆட்சி உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அதனை அதிகாரபூர்வமாக அறிவிக்க வேண்டிய வேலை



மட்டும்தான் உள்ளது. எமது மேயரும் பதவியேற்றத் தயாராகவுள்ளார்.” – என்றார்.






# மட்டு.மாவட்டத்தில் கதிர்காம பாத யாத்திரீகர்கள்!

( வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட யாழ். - கதிர்காமம் பாதயாத்திரீகர்கள் 22 நாள்களில் 04 மாவட்டங்களை கடந்து மட்டு.மாவட்டத்துக்குச் சென்றுள்ளனர்.

யாழ். செல்வச்சந்நிதி ஆலயத்தில் இருந்து கடந்த முதலாம் திகதி புறப்பட்ட ஜெயா வேல்சாமி தலைமையிலான பாதயாத்திரை குழுவினர் 23 தினங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய நான்கு மாவட்டங்களைக் கடந்து தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரவேசித்துள்ளனர்.

அங்கு வெருகல் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் வெள்ளி பூஜையில் கலந்து கொண்டனர்.

மழை, வெயிலுக்கு மத்தியில் சுமார் 100 அடியார்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

எதிர்வரும் ஜுலை மாதம் 26 ஆம் திகதி கதிர்காமத்தை இவர்கள் சென்றடைவர்.

### யாழில் கடத்தப்பட்டதாகத் தேடப்பட்ட யுவதி

# தன்னை எவருமே கடத்தவில்லை எனத் தெரிவித்து காணொளி வெளியீடு

யாழில் கடத்தப்பட்டதாகத் தேடப்பட்டு வந்த யுவதி தன்னை யாரும் கடத்தவில்லை என தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை காணொளி ஒன்றை வெளியிட்டு அவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு பகுதியை சேர்ந்த 22 வயது யுவதியும், பூநகரி கௌதாரிமுனை பகுதியை சேர்ந்த 22 வயது இளைஞனும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் திருமணம் செய்துள்ளனர்.

பெண் வீட்டாருக்கு பயந்து இருவரும் தலைமறைவாக இருந்த நிலையில், பின்னர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இளவாலை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றுள்ளனர்.

அங்கு வந்த பெண் வீட்டார் குறித்த யுவதியை பிரிப்பதற்கு முயற்சி செய்த போதும், இருவருக்கும் 18 வயது நிறைவடைந்தலாலும், இருவரும் பிரிவதற்கு விருப்பம் தெரிவிக்காத நிலையில் அவர்களை பிரிக்க முடியாது என இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறான பின்னணியில் வழக்கு நிறைவடைந்து வரும்போது மாலை 4.37 மணியளவில் பெண்ணின் சகோதரன் உள்ளிட்ட சிலர் அடங்கிய குழுவினர் அந்த இளைஞனை தாக்கிவிட்டு யுவதியை வாகனத்தில் ஏற்றிக் கடத்திச் சென்றனர் என்று தெரவிக்கப்பட்டது.

இதையடுத்து, பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் தீவிரமாக தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன. இந்த நிலையில் அந்த யுவதி, தான் கடத்தப்படவில்லை எனக் கூறி காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தக் காணொளியில் அவர் மேலும் தெரிவிக்கையில், "என்னை யாரும் கடத்தவில்லை, நான்தான் என்னை அழைத்து செல்லுமாறு என் அண்ணாக்களுக்கு குறுஞ்செய்தி அனுப்பி இருந்தேன். அதனால்தான் அவர்கள் என்னை கூட்டிக் கொண்டு சென்றனர். யாரும் என்னைத் தேட வேண்டாம்.அடுத்த வழக்குக்கு நான் நீதிமன்றத்தில் முன்னிலை ஆவேன்".- எனத் தெரிவித்துள்ளார்.



# லஞ்சம் பெற முயன்ற கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு 28 வருட சிறை விதிப்பு!

லஞ்சம் பெற முயன்ற இரண்டு கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு 28 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஹெரோயின் வைத்திருந்த இரண்டு பெண்களைக் கைது செய்த இந்த அதிகாரிகள் இருவரும், அந்தப் பெண்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யாது, மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, இலகுவாக தப்பித்துக் கொள்ள வழி செய்துள்ளனர்.

அதற்காக அந்தக் கலால் திணைக்கள அதிகாரிகள் இருவரும் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா லஞ்சம் தருமாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பில் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அந்தக் கலால் திணைக்கள அதிகாரிகள் இருவருக்கும் எதிராக வழக்குத் தொடர்ந்திருந்தது. இருவருக்கும் எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்ட நிலையில், தலா 28 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

ஏழு வருடங்களில் கழிந்து செல்லுமாறும் ஏக காலத்தில் தண்டனை அனுபவிக்குமாறும் உயர்நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க உத்தரவிட்டுள்ளார்.











# அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக சுகாதார உத்தியோகத்தருக்குச் செயலமர்வு

**(றியாஸ் ஆதம்)**

அனர்தங்களின் போது ஏற்படுகின்ற பாதிப்புக்கள் மற்றும் தொற்று நோய் போன்றவற்றில இருந்து பொது மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு சுகாதாரத்துறை உத்தியோகத்தர்களுக்குத் தெளிவூட்டும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய பொதுச் சுகாதார பிரிவால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட இந்த நிகழ்வு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிராந்திய பொதுச் சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எல்.எம்.அஜ்வத், பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பொதுச் சுகாதார மருத்துவ தாதியர்கள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ மாதுக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம்.றியாஸ், வைத்தியர் ரீ.எஸ்.ஆர்.ரீ.ஆர்.றஜாப் ஆகியோர் இந்த நிகழ்வில் வளவாளர்களாக கலந்துகொண்டு அனர்த்த நிலைமைகளில் சுகாதாரத்துறையினர் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அனர்த்தங்களின் போது சுகாதாரத்துறையினர் எதிர்கொள்ளும் சவால்களும் அதனை வெற்றிகொள்வதற்கு உரிய வழிமுறைகளும் எனும் தலைப்புக்களில் விரிவுரையாற்றினர்.



# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கிவந்த குளிர்பான நிலையத்துக்குத் தண்டம்

**(த.சுபேசன்)**

பூநகரி, முழங்காவில் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய குளிர்பான நிலையத்துக்கு கிளிநொச்சி நீதிமன்றால் ஐம்பதாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அத்தோடு, ஒருவாரத்தினுள் அனைத்து குறைபாடுகளையும் நிவர்த்திசெய்யுமாறும் கடும் எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தமாதம் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தலைமையில் நடத்தப்பட்ட பரிசோதனையில் இந்தக் குளிர்பான நிலையம் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்குவது இனங்காணப்பட்டது.

இனங்காணப்பட்ட பத்துக் குற்றங்களுக்குமாக முழங்காவில் பிரிவு பொது சுகாதார பரிசோதகரால் கிளிநொச்சி நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றால் குற்றங்கள் உறுதி செய்யப்பட்டதை அடுத்து குளிர்பான நிலைய உரிமையாளருக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. தண்டப் பணமாக ஐம்பதாயிரம் ரூபாவும் விதிக்கப்பட்டது.



# இலங்கை கனிமத் தளங்களைப் பார்வையிட்ட இந்திய சுரங்க, கனிமத்துறை அமைச்சகக் குழு

இந்திய சுரங்க மற்றும் கனிமத்துறை அமைச்சகத்தின் குழு ஒன்று, இலங்கையில் கனிமத் தளங்களுக்கு அண்மையில் விஜயம் செய்துள்ளது.

அத்துடன், இலங்கையின் முக்கிய கனிமத் தளங்களுக்குச் சென்று உயர் அதிகாரிகளையும் சந்தித்துள்ளது.

கனிமத் துறையில் சாத்தியமான ஒத்துழைப்புகள் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

இந்தக் குழு, தொழில்துறை மற்றும் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தியையும் சந்தித்துள்ளது.

இந்தப் பயணத்தின் நோக்கம், முதலீடு மற்றும் ஒத்துழைப்பு வாய்ப்புகளை ஆராய்வதும், மேம்பட்ட சுரங்க தொழில்நுட்பங்களில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதுமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை இணை அமைச்சர் ஸ்ரீ சதீஸ் சந்திர துபே, இந்தக் குழுவுக்கு தலைமையேற்றிருந்தார்.

இலங்கை அரசின் முதலீட்டு சபையின் தரவுகளின்படி, இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கிழக்கு கடற்கரை நகரமான புல்மோட்டை மற்றும் வடமேற்கு கடற்கரை நகரமான புத்தளம் ஆகிய இரண்டிலும் 7.5 மில்லியன் மெட்ரிக் தொன், இல்மனைட், ரூட்டைல், சிலிக்கான் வைப்புத்தொகைகள், 45,000 மெற்றிக்தொன் கிராஃபைட் மற்றும் 60 மில்லியன் மெற்றிக்தொன் அபாடைட் ஆகியவை உள்ளன.

அத்துடன், இலங்கையின் வடக்குப் பகுதியில் உள்ள ஒரு கனிய மணல் படிவில் இல்மனைட், ரூட்டைல், சிலிக கான், மோனாசைட், கார்னெட், சில்லிமனைட் மற்றும் பிற கனரக கனிமங்கள் இருப்பதாக ஏற்றுமதி மேம்பாட்டு சபையின் தரவு காட்டுகிறது.

முன்னதாக, கடந்த சுரங்கத்துறையில் முதலீடு செய்யவென சுமார் 10 வெளிநாட்டு நிறுவனங்களை வரவழைத்தது. எனினும் செயல்முறையை இறுதிப்படுத்த முடியவில்லை.

இலங்கையை பொறுத்தவரையில், அமெரிக்கா, இங்கிலாந்து, சீனா, இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு கனிமங்களை ஏற்றுமதி செய்கிறது.

இதன்மூலம், 2024 இல் சுமார் 25 மில்லியன் டொலர் வருவாய் கிடைத்தது. எனினும், இது, 2022 இல் ஏற்றுமதி செய்யப்பட்டதில் பாதிக்கும் குறைவானது என்று மத்திய வங்கித் தரவு தெரிவித்துள்ளது.



# கிராம உத்தியோகத்தரின் முயற்சியால் தடுக்கப்பட்ட மற்றுமோர் சதுப்புநில அபகரிப்பு.!

**(வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு பிரதான வீதியில் உள்ள ஒரு சதுப்பு நில அபகரிப்பானது குறித்த பகுதி கிராம உத்தியோகத்தரால் தடுக்கப்பட்டுள்ளது.

காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் காரைதீவு 01 கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு உட்பட்ட பிரதான வீதியை அண்டிய பகுதிகளில் உள்ள சதுப்பு நில வயல் காணிகள் அனுமதியற்ற வகையில் மூடப்பட்டு வருகின்றன.

இது தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த 01.04.2025 ஆம் திகதி கிராம உத்தியோகத்தரால் சதுப்பு நில காணி மண்ணிட்டு நிரப்பியமை தொடர்பாக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது. அத்துடன் குறித்த மண் அகற்றப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் (22) மேலும் ஒரு சதுப்பு நில அபகரிப்பானது குறித்த பகுதி கிராம உத்தியோகத்தரால் தடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது பிரதான வீதி காரைதீவு 01 இல் அமைந்துள்ள சதுப்புநில காணியானது இனந்தெரியாத நபர்களால் கடந்த 09 ஆம் திகதி அனுமதியற்ற வகையில் மண்ணிடப்பட்டது.

அது தொடர்பான பொலிஸ் முறைப்பாடு கிராம உத்தியோகத்தரால் பிரதேச செயலாளர் ஊடாக மேற்கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து குறித்த காணியினுள் இடப்பட்ட கிரவல் மண்ணானது காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெகத், ரத்நாயக்க மற்றும் குறித்த பிரிவு கிராம உத்தியோகத்தர் கஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் நேற்று அகற்றப்பட்டது. இந்தச் செயற்பாட்டுக்கான வாகன உதவியை காரைதீவு பிரதேச சபை வழங்கியிருந்தது.

# குற்றம் நிரூபிக்கப்படாத நிலையில் கைதான இளைஞனுக்கு இழப்பீடு!

கைது செய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட ஒரு இளைஞனுக்கு, 12 லட்சம் ரூபா இழப்பீட்டை, தனிப்பட்ட முறையில் செலுத்துமாறு முன்னாள் பொலிஸ் அதிகாரிகள் 6 பேருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுராதபுரம் தம்புத்தேகம பொலிஸ் நிலையத்தில் 2012 ஆம் ஆண்டு இந்த சம்பவம் பதிவானது.

சம்பவம் நடந்த நேரத்தில் 27 வயதுடைய தகவல் தொடர்புமைய இயக்குநரான மனுதாரர் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவின் மீது இந்த தீர்ப்பு நேற்று (23) வழங்கப்பட்டுள்ளது.

இழப்பீட்டு உத்தரவுக்கு மேலதிகமாக பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகள் குறித்து பரிசீலிக்குமாறும் உயர் நீதிமன்றம், சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் மொத்த இழப்பீட்டுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்று நீதிமன்றம் பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டது.

மனுதாரர் சுசில் பிரியங்க செனவிரத்ன, தம்புத்தேகம பொலிஸாரின் நடத்தைக்கு எதிரான போராட்ட ஊர்வலத்தில் பங்கேற்றார் என்று பொய்யாக குற்றம் சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டார் என்றும் இது தொடர்பில் நீதிமன்றில் நிரூபிக்கப்பட்ட நிலையிலேயே இந்தத் தீர்ப்பு நேற்று (23) வழங்கப்பட்டுள்ளது.







# மட்டக்களப்பில் உடைந்து 2 வருடங்களாகியும் புனரமைக்கப்படாத மகிழவெட்டுவான் பாலம்!

## அரசியல்வாதிகள் கவனிக்காமை தொடர்பில் சீற்றம் கொள்ளும் பொதுமக்கள்

(கனகராசா சரவணன்)

வவுணதீவு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மகிழவெட்டுவான் பாலம் உடைந்து வீழ்ந்துள்ளது. இதனால் கடந்த 2 வருடங்களாக மட்டக்களப்புக்கும் மகிழவெட்டுவான் பிரதேசத்துக்கும் இடையிலான போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், பொதுமக்கள் பிரயாணம் செய்ய முடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதுவரை அரசியல்வாதிகளோ, அரச அதிகாரிகளோ இது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை என்று பொது மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மகிழவெட்டுவான் நரிப்புதோட்டம், கல்குடா, நெல்லூர் பிரதேசங்களில் இருந்து மட்டக்களப்பு நகருக்கு செல்லும் பிரதான வீதியியிலுள்ள மகிழவெட்டுவான் பாலம் கடந்த 2023 டிசெம்பர் மாதம் உடைந்து வீழ்ந்தது. இதனால் மட்டக்களப்பு நகருக்கான போக்குவரத்து துண்டிக்கப்பட்டது.

இதனால் நகரில் இருந்து அந்த பிரதேசத்துக்குச் செல்லும் பொது போக்குவரத்து பஸ் பாலம் ஊடாகச் செல்ல முடியாது அந்த பாலம்வரையே செல்கிறது. அங்கு பயணிகள் பஸ்ஸில் இருந்து இறங்கி சுமார் இரண்டு கிலோ மீற்றர் வரை நடந்து செல்ல வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.



பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள், நோயாளர்கள், வயோதிபர்கள் தமது மூடை முடிச்சுகளுடன் பல்வேறு கஸ்டங்கள் மத்தியில் நடந்து, சுட்டெரிக்கும் வெய்யில், கொட்டும் மழைக்கு மத்தியில் பாடசாலை மற்றும் வீடுகளுக்குச் செல்லவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த உடைந்த பாலத்தை புனரமைக்காது அதற்கு அருகில் சுமார் 35 லச்சம் ரூபா செலவில் தற்காலிகமாக ஒரு பாலத்தை அமைத்தனர். அதுவும் மழை வெள்ளத்தால் அள்ளுண்டு உடைந்து பயணிக்க முடியாமல் உள்ளது.

இந்த நிலையில் மக்கள் நகரில் இருந்து குறித்த பிரதேசங்களுக்கோ அந்த பிரதேசங்களில் இருந்து மட்டக்களப்பு நகருக்கோ பயணிக்க வவுணதீவு, ஆயித்தியமலை ஊடாக சுமார் 20 கிலோமீற்றர் தூரம் சுற்றுகின்றனர்.

இது தொடர்பாக அரசியல்வாதிகள் அரச அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவந்து இதுவரை எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொது மக்கள் கடும் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாலம் உடைந்து வீழ்ந்ததால் கிராமங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் தமது அன்றாட அடிப்படை தேவைகளை பூர்தி செய்ய முடியாது பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இது தொடர்பாக அரசியல்வாதிகளுக்கு தெரிந்தும் தேர்தல் காலங்களில் வாக்கு கேட்டு வந்த அரசியல்வாதிகள் கூட இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த பிரதேசத்தில் வாழும் சுமார் 3ஆயிரம் குடும்பங்களின் அடிப்படை வசதியான இந்த போக்குவரத்தை கூட செய்யாது பாராமுகமாக இருக்கின்றனர்.

அவ்வாறே அரச அதிகாரிகளும் செயற்படுகின்றனர் எனவே சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்குமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கொழும்பில் என்.பி.பி. ஆட்சியமைக்க பிரபா கணேசனின் கட்சி முழு ஆதரவு

பிரபா கணேசன் தலைமையிலான ஜனநாயகத் தேசிய கூட்டணி தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாகச் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமானதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் பிரபா கணேசன் தலைமையில் பம்பலப்பிட்டி தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை இடம்பெற்றது.

இதன்போது கொழும்பு மாநகர சபையில் ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு ஆதரவளிப்பதாக ஏகமானதாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனநாயகத் தேசியக் கூட்டணிக்கு கொழும்பு மாநகர சபை உட்பட கிடைக்கப் பெற்ற பத்து ஆசனங்கள் மக்களின் அபிவிருத்திக்காகவே பயன்படுத்தப்படும் என்றும், அரசு மக்கள் விரோதச் செயற்பாடுகளை முன்னெடுத்தால் ஆதரவை வாபஸ் வாங்கத் தயங்க



மாட்டோம் என்றும் ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் தலைவர் பிரபா கணேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.




# தமிழ் கட்சிகளின் தேர்தல் வெற்றி: ஒரு நாடு இரு தேச ஆணையா?

● நவீனன்

**(இந்த வெற்றியின் மூலமாக ஒரு நாடு என்பது சர்வதேச எல்லைகளைக் கொண்ட சட்ட ரீதியான ஓர் புவியியல் நிலப்பரப்பு தமிழர் தாயகத்தில் உள்ளது என்பதை உணர்த்துகிறது. தமிழர்கள் தொடர்ச்சியாக பேரினவாத அரசுகளால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டு வருவதை கவனத்தில் கொண்டு, போரில் பெருமளவான மக்களை இழந்த நிலையிலும் தமிழர்களுக்கான பாது காப்பான நீடித்து நிற்கும் தீர்வை தேடுவது தமிழர்கள் அனைவரதும் கடமையாகும்)**

ஸ்ரீலங்காவின் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் கடந்த 2025 மே 6 இல் நடைபெற்றன. மொத்தம் 17,296,330 இலங்கையர் இத்தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றனர். வாக்காளர்கள் மொத்தமுள்ள 341 உள்ளூராட்சி சபைகளில் 28 மாநகரசபைகள், 36 நகரசபைகள், 275 பிரதேச சபைகள் உள்ளிட்ட 339 உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர்.

நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வை அடைய வேண்டுமென்ற இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் இந்த தேர்தல் மூலம் ஆணையை தந்திருக்கின்றார்கள்.

**வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் ஆணை!**

நடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் தமிழர் தாயகத்தில் தமிழ்க் கட்சிகள் பாரிய வெற்றி, ஆளும் தரப்பின் எக்காளத்தை அடக்கி வைத்துள்ளது. எதிர்பாரா வண்ணம் 2025 ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் வடக்கு, கிழக்கிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கின்றன.

நாடு யாரிடமாவது இருக்கட்டும், தமிழர் தாயகம் தமிழரோடு என்பதை வடக்கு கிழக்கில் இருக்கும் மக்கள் அனைவரும் மீண்டும் உறுதியாக தெரிவித்துள்ளனர். எல்லா சபைகளிலிலும் அமோகமான வெற்றியைத் பெற்றுருக்கின்றார்கள்.

இது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வெற்றி என்பதைத் தாண்டி இது தமிழர்களுடைய எதிர் காலத்துக்கான ஆணை ஒன்றைத் தமிழ் மக்கள் தமிழ்க்



கட்சியிகளிடம் தற்போது ஒப்படைத்திருக்கின்றார்கள்.

**ஒரு நாடு - தேசம்**

இந்த வெற்றியின் மூலமாக ஒரு நாடு என்பது சர்வதேச எல்லைகளைக் கொண்ட சட்ட ரீதியான ஓர் புவியியல் நிலப்பரப்பு தமிழர் தாயகத்தில் உள்ளது என்பதை உணர்த்துகிறது. இவை மற்றைய நாடுகளு டனான சர்வதேச உறவுகளையும் ஏற்றுமதி இறக்கு மதிகளைக் கொண்ட சர்வதேச வர்த்தகங்களையும் கொண்டிருக்கும் சட்டரீதியான அங்கீகாரம் பெற்ற ஒன்றாகும்.

நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வை அடைய வேண் டும் என்ற இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையைத் தந்திருக்கின்றார்கள். மாகாண சபைத் தேர்தலிலும் வடக்கு, கிழக்கில் கூடுதலான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்க உறுதுணை பூண்டுள்ளார்கள்.

பெரும்பான்மையாக தமிழர்கள் இருக்கும் அனைத்து பிரதேச சபைகளிலும் பெரும்பான்மையான ஆசனங் களை தமிழ் கட்சிகள் வென்றிருக்கின்றன.

இதன்மூலம் அனைத்து பிரதேச சபைகளிலும் ஆட்சியமைக்கக் கூடிய சூழல் இருக்கின்றது. அத்துடன் சிறுபான்மையாக இருக்கும் பிரதேச சபைகளிலும் பல ஆசனங்களை தமிழ் கட்சிகள் பெற்றிருக்கின்றன.

**ஒரு நாடு இரு தேசங்கள் - அரசியல் தீர்வு**

ஒரு நாடு இரு தேசங்கள் "முநெ ஊழரவெல வறழ யேவழைளெ" என்ற நிரந்தரமான ஒரு அரசியல் தீர்வை

தொடர்ச்சி▼



# தமிழ் கட்சிகளின் தேர்தல் வெற்றி: ஒரு நாடு இரு தேச ஆணையா?

**தொடர்ச்சி▲**

அடைய வேண்டுமென்ற இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணையை தந்திருக்கின்றார்கள்.

தேசம் என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வரைவிலக் கணங்கள் காணப்பட்டாலும் கூட பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வரைவிலக்கணத்தின்படி ஒரு இனம் தனக்கென தனியான மொழி, கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம் மற்றும் வேறுபடுத்திக் காட்டக்கூடிய தனியான வரலாறு என்பவற்றைக் கொண்டிருப்பதுடன் குறித்த ஓர் நிலப் பகுதியில் பெரும்பான்மையாக வாழ்ந்து வருவார்கள் ஆயின் அவர்களை தேசம் (Nation) என அங்கீகரிக்க முடியும்.

தமிழ் மக்களது அரசியல் பெருவெளியில் ஒரு நாடு இரு தேசங்கள் 'One County two Nations' என் கின்ற கருத்தியல் பரவலாக நீண்டகாலமாக பேசப்பட்டு வருகிறது.

இலங்கைத்தீவில் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் மீது 1956 ஆம் ஆண்டு தொடக்கம் நேரடியாக அடக்கு முறைகள் நடைபெற்று வந்தன. தனிச் சிங்கள சட்டம் என்றும் கல்வித்தரப்படுத்தல் என்றும் சட்டரீதியான அடக்குமுறைகள் ஊடாக தமிழ் மக்கள் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

அரசியல் வழிமுறைகள் ஊடாக உரிமைகளைப் பெற, அதற்கான வழிகளில் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டுவருகின்றார்கள். இதில் ஏக்கிய இராச்சிய என்ற ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை சிங்கள ஆளும் அரசு தமிழ் மக்களின் மீது திணிக்கிறது.

அர்த்தமுள்ள அரசியல் பரவலாக்கம் என்ற நிலைப் பாட்டுக்கு மாற்று நிலைப்பாடாக ஒரு நாடு இரு தேசங்கள் என்பதே நிரந்தர அரசியல் தீர்வை பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

இலங்கைத்தீவில் எண்ணிக்கையில் குறைவான தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் அவர்கள் வாழ்ந்துவரும் தேசம் என்ற எண்ணக்கரு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் தமிழர்கள் தங்கள் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய தேவை இதன் மூலமாகவே சாத்தியப்படும்.

**பெரும்பான்மையை இழந்த ஆளும் கட்சி!**

சில சபைகளில் இணைந்து ஆட்சியமைப்பது என்பதும், அனைத்து சபைகளிலும் ஆட்சியமைக்கக் கூடிய ஒரு வியூகத்தை தமிழ் கட்சிகள் பெற்றுள்ளன.

உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதிநிதித்துவ முறை என்பது சற்றுச் சிக்கலான முறையாகும். அப்படியான சிக்கலான ஒரு முறை காணப்பட்டபோதிலும் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்ற அனைத்து சபைகளிலும் கணிசமான வாக்குகளைப தமிழ் கட்சிகள் பெற்றி ருக்கின்றன.

**தமிழர் தேசம்**

தமிழர் தேசத்தில் மேற்கொள்ளப்படும் நிர்வாகம் அனைத்தும் தமிழரின் நிர்வாக தலைமையில் நடைபெறவேண்டும். கனடாவில் கியூபக் உள்ளது போல பிரித்தானியாவில் வட அயர்லாந்து, ஸ்கொட்லாந்து உள்ளது போல தனியான நிர்வாக அலகாக தமிழர் தேசம் இருக்கவேண்டும்.

சிங்கள தேசத்தின் இருப்பையும் அதன் வரலாற் றையும் ஏற்றுக்கொள்வது போல தமிழர் தேசத்தின் இருப்பையும் வரலாற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழர் நிலங்கள், தமிழர் கலை, தமிழர் பண்பாடு, தமிழர் பொருளாதாரம், தமிழர் கல்வி பாதுகாக்கப்பட வேண்டுமானால் தமிழர் தேசத்துக்கான அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

தமிழர்களது இருப்பும் பாதுகாப்பும் பாதிக்கப்படும் இடத்தில், சர்வசன வாக்கெடுப்பு நடத்தி தமது தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையும் இறைமையும் கொண்டவர்கள் என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண் டும்.

தமிழர்கள் தொடர்ச்சியாக பேரினவாத அரசுகளால் தமக்கு அநீதி இழைக்கப்பட்டு வருவதை கவனத்தில் கொண்டு, போரில் பெருமளவான மக்களை இழந்த நிலையிலும் தமிழர்களுக்கான பாதுகாப்பான நீடித்து நிற்ககின்ற தீர்வை தேடுவது தமிழர்கள் அனைவரதும் கடமையாகும்.

# இந்திய வெளியுறவுக் கொள்கை சரிந்துவிட்டது; எஸ். ஜெய்சங்கர் மீது ராகுல் காந்தி குற்றச்சாட்டு

இந்தியா - பாகிஸ்தான் இடையே யான இராணுவ நடவடிக்கை விவகாரத்தில், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சரிந்துவிட்டதாக காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"இந்தியா ஏன் பாகிஸ்தானுடன் இணை வைக்கப்படுகிறது? பாகிஸ்தானைக் கண்டிப்பதில் ஒரு நாடு கூட நம்மை ஆதரிக்கவில்லையே ஏன்? இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்ய ட்ரம்பிடம் யார் கேட்டார்கள்?" என்று கேள்விகளை எழுப்பியுள்ளார்.



தொடர்ந்து, "இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை சரிந்துவிட்டது" என்றும் அவர் விமர்சித்துள்ளார்.

முன்னதாக, வெளியிட்ட பதிவில், இந்தியாவின் கௌரவம் குறித்த விஷயத்தில் பிரதமர் நரேந்திர மோடி சமரசம் செய்து கொண்டார் என ராகுல் காந்தி குற்றம் சாட்டி இருந்தார்.

இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில் ராகுல் காந்தி வெளியிட்ட பதிவில்,

"மோடிஜி, வெற்றுப் பேச்சுகளை நிறுத்துங்கள். எனக்கு இவற்றுக்கு பதில் கூறுங்கள்:

1. பயங்கரவாதம் குறித்த பாகிஸ்தானின் அறிக்கையை நீங்கள் நம்பியது ஏன்?

2. அமெரிக்க அதிபர் ட்ரம்ப்புக்கு பணிந்து இந்தியாவின் நலன்களை ஏன் தியாகம் செய்தீர்கள்?

3. கேமராக்கள் முன்னால் மட்டுமே உங்கள் ரத்தம் கொதிப்பது ஏன்?

இந்தியாவின் கௌரவத்தை நீங்கள் சமரசம் செய்துவிட்டீர்கள்" என்று தெரிவித்திருந்தார்.

# தூதுக் குழுக்கள் நாடு திரும்பியதும் நாடாளுமன்றத்தை கூட்ட வேண்டும்



## மம்தா பானர்ஜி கோரிக்கை

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டினை விளக்குவதற்காக பல்வேறு நாடுகளுக்குச் சென்றுள்ள தூதுக் குழுக்கள் நாடு திரும்பியதும் நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானஜி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் நடவடிக்கையின் ஒரு பகுதியாக பல்வேறு நாடுகளுக்கு பிரதிநிதிகள் குழுக்கள் சென்றிருப்பதை பார்க்கும்போது நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் தொடர்ந்து கூறிவருவது போல, தேசத்தின் நலனுக்காகவும், நமது இறையாண்மையை காக்கவும் மத்திய அரசின் நடவடிக்கைகளுக்கு திரிணமூல் காங்கிரஸ் கட்சி துணைநிற்கும்.

இந்த மாபெரும் தேசத்தின் மக்கள் சமீபத்திய மோதல்கள் மற்றும் சமீபத்தில் வளர்ந்து வரும் முன்னேற்றங்கள் குறித்து வேறு எவருக்கும் முன்பாக தெரிந்து கொள்வதற்கு முதன்மையான உரிமையுள்ளவர்கள். இதனை நான் தீவிரமாக நம்புவதால், வெளிநாடு சென்றிருக்கும் பிரதிநிதிகள் குழுக்கள் பாதுகாப்பாக நாடு திரும்பியதும், நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை மத்திய அரசு கூட்ட வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

# மாஸ்கோவில் ரஷ்ய செனட்டர்களுடன் கனிமொழி தலைமையிலான குழு சந்திப்பு

தி.மு.க. எம்.பி கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் அடங்கிய தூதுக் குழு நேற்று மாஸ்கோவில் ரஷ்ய வெளியுறவு விவகாரங்களுக்கான கூட்டமைப்பு கவுன்சில் குழுவின் முதல் துணைத் தலைவர் உட்பட செனட்டர்கள் பலரையும் சந்தித்தது.

இது குறித்து ரஷ்யாவில் உள்ள இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில்,

"பயங்கரவாதத்துக்கு எதிரான போராட்டத்தில் ஒன்றாக இணைந்துள்ளோம். ரஷ்யாவின் வெளியுறவு விவகாரங்களுக்கான குழுவின் முதல் துணைத் தலைவர் ஆண்ட்ரி டெனிசோவ் மற்றும் பிற செனட்டர்களுடன் எம்.பி கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழு சந்திப்பு நடத்தியது." என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, ரஷ்யாவுக்கான இந்தியத் தூதர் வினய் குமார், அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவுக்கு இந்தியா - ரஷ்யா உறவுகளின் பல்வேறு அம்சங்கள் குறித்து விளக்கினார்.



தி.மு.க. எம்.பி கனிமொழி தலைமையிலான அனைத்துக் கட்சிக் குழு நேற்று மாஸ்கோவுக்கு சென்றது. இந்தக் குழுவை ரஷ்யாவுக்கான இந்தியத் தூதர் வினய் குமார் வரவேற்றார்.

ரஷ்யா, ஸ்லோவேனியா, கிரீஸ், லாட்வியா மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட பல நாடுகளுக்கு இந்தக் குழு பயணம் செய்கிறது. இது ஒபரேஷன் சிந்தூர் மற்றும் பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தியாவின் அசைக்க முடியாத போராட்டத்தை எடுத்துக் காட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



# இஸ்ரேலின் தாக்குதலில் காசாவில் 60 பேர் பலி

காசா முனையில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 60 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் ஏழாம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்ட நிலையில், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக் குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகின்றது.



அத்தோடு, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

பணய கைதிகளில் சிலர் ஹமாஸ் ஆயுதக்குழுவினரால் கொல்லப்பட்ட நிலையில் அவர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன.

# அப்பிள் நிறுவனத்துக்கு 25 வீத வரி விதிக்கப்படும்

## டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல்



அப்பிள் நிறுவனம் தனது ஐபோன்களை அமெரிக்காவில் தயாரிக்கவில்லை என்றால், இறக்குமதி செய்யப்படும் ஐபோன்களுக்கு 25 வீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மிரட்டல் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக டொனால்ட் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைத்தளத்தல் வெளியிட்டுள்ள ஒரு பதிவில்,

“அமெரிக்காவில் விற்கப்படும் ஐபோன்கள் அமெரிக்காவிலேயே தயாரிக்கப்பட வேண்டும் என்று நான் நீண்ட காலமாக அப்பிள் நிறுவனத்தின் டிம் குக்கிடம் தெரிவித்து வருகிறேன். அவை இந்தியாவிலோ அல்லது வேறு எங்குமோ தயாரிக்கப்படக் கூடாது. இது நடக்கவில்லை என்றால், குறைந்தபட்சம் 25 வீதம் கட்டணத்தை அப்பிள் நிறுவனம் அமெரிக்காவுக்கு செலுத்த வேண்டும்.” என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தனது அசெம்பிள் செயல்பாடுகளை ஆப்பிள் நிறுவனம் மேற்கொள்ள டொனால்ட் ட்ரம்ப் கடுமையாகக் கண்டிப்பது இது முதல் முறை அல்ல. இதற்கு முன்பும், அவர் ஆப்பிள் நிறுவனத்தை எச்சரித்திருந்தார். “நீங்கள் இந்தியாவில் உற்பத்தி கட்டமைப்புகளை அமைப்பதில் எங்களுக்கு விருப்பம் இல்லை. அவர்களை அவர்களே பார்த்துக்கொள்வார்கள். மாறாக, ஆப்பிள் நிறுவனம் அமெரிக்காவில் ஐபோன்களை அசெம்பிள் செய்யத் தொடங்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறேன் என டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

கனடா முரசு
சனிக்கிழமை 24/05/2025

## கனடாவில் 3 வாரங்களாக தேடப்படும் சிறுவர்கள்

கனடாவின் வடகிழக்குப் பகுதியில் உள்ள நோவா ஸ்கோஷியாவின் லான்ஸ்டவுன் ஸ்டேஷனில் காணாமல் போன இரண்டு குழந்தைகள் தொடர்பான விசார 03



# மற்றுமொரு தமிழின அழிப்பு நினைவுத்தூபி அமைப்பதற்கான பிரேரணை நிறைவேற்றம்

**தமிழின அழிப்பு நினைவகம் ஒன்றை டொரோன்டோ நகரத்தில் அமைப்பதற்கான பிரேரணை டொரோன்டோ நகர சபையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.**

**ஸ்காபொரோ தென்மேற்கு தொகுதி நகரசபை உறுப்பினர் பார்த்தி கந்தவேள் இந்த பிரேரணையை முன்வைத்துள்ளார். டொரோன்டோவில் தமிழின அழிப்பு நினைவகம் ஒன்றை அமைப்பதற்கு தமிழ் சமூகத்துடன் இணைந்து டொரோன்டோ நகரசபை பணியாற்ற இந்த பிரேரணையில் கோரப்பட்டுள்ளது.**


இந்த பிரேரணையை நகரசபை உறுப்பினர் Josh Matlow வழிமொழிந்துள்ளார்.

தனது பிரேரணை டொரோன்டோ நகர சபை ஏகமனதாக நிறைவேற்றியதில் பெருமை கொள்கிறேன் என வாக்கெடுப்பின் முடிவில் பார்த்தி கந்தவேள் தெரிவித்தார்.

இந்த பிரேரணையை ஏகமனதாக ஆதரித்த நகர முதல்வர் Olivia Chow உட்பட ஏனைய நகரசபை உறுப்பினர்களுக்கும் அவர் நன்றி தெரிவித்துள்ளார்.

இந்த நினைவகம் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலை ஒரு போதும் மறைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் என பார்த்தி கந்தவேள் நம்பிக்கை தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் மிகப் பெரிய எண்ணிக்கையில் வசிக்கும் ஸ்காபொரோவில் இந்த நினைவகம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



TORONTO

City Council consideration on May 21 and 22, 2025

**MM30.25 - Tamil Genocide Monument in Scarborough - by Councillor Parthi Kandavel, seconded by Councillor Josh Matlow**

**Status:** Amended
**Wards:** All

**Recommendations**

Councillor Parthi Kandavel, seconded by Councillor Josh Matlow recommends that:

1. City Council request the General Manager, Economic Development and Culture, in consultation with the General Manager, Parks and Recreation, to consult with Tamil community organizations that have significant experience with building community monuments, including the recent City of Brampton Tamil Genocide Monument, to identify a potential site in a City of Toronto Park in Scarborough to accept a Tamil Genocide Monument under the provisions of the City's Public Art and Monument Donations Policy and report to the Scarborough Community Council in the fourth quarter of 2025.

Source: Toronto City Clerk at www.toronto.ca/council

City Councillor
Parthi Kandavel
Scarborough Southwest

416-392-4052
councillor_kandavel@toronto.ca

# ஒண்டாரியோவில் இடைத்தேர்தலில் போட்டியிடுகின்றனர் இரு தமிழர்கள்





கனடா ஒண்டாரியோ Scarborough-Rouge Park தொகுதிக்கான இடைத் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தை இரண்டு தமிழர்கள் வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தொகுதியின் நகரசபை உறுப்பினர் Jennifer McKelvie, கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்டு Ajax தொகுதியில் வெற்றி பெற்ற நிலையில் Toronto நகர சபைக்கான இடைத் தேர்தல் ஒன்றை கடந்த வியாழக்கிழமை அறிவித்துள்ளது.

இந்த இடைத் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தை இரண்டு தமிழர்கள் அறிவித்துள்ளனர்.

Toronto நகர பாடசாலை வாரிய அறங்காவலர்களாக அனு ஸ்ரீஸ் கந்தராஜா, நீதன் சான் ஆகியோர் இந்த இடைத்தேர்தலில் போட்டியிடும் எண்ணத்தை வெளியிட்டுள்ளனர்.

அனு ஸ்ரீஸ்கந்தராஜா தற்போது Scarborough-Rouge Park தொகுதிக்கான Toronto நகர பாடசாலை வாரிய அறங்காவலராக பணியாற்றுகின்றார். நீதன் சான் தற்போது Toronto நகர பாடசாலை வாரிய தலைவராக உள்ளார்.

இந்தத் தொகுதிக்கான வேட்பு மனுக்கள் ஜூன் 23 ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படும் எனத் தெரிய வருகிறது.

செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் ஆரம்பத்தில் வாக்களிப்பு நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த இடைத்தேர்தல் 550,000 டொலர் செலவில் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.



# டொராண்டோ உணவகத்தில் தீ விபத்து குறித்து விசாரணை

கனடாவின், ஸ்கார்பரோவில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் அமைந்துள்ள உணவகத்தில் வெள்ளிக்கிழமை காலை ஏற்பட்ட தீ விபத்து குற்றசெயலா? என்ற அடிப்படையில் விசாரிக்கப்படுகிறது என டொராண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லாரன்ஸ் அவென்யூ ஈஸ்ட் மற்றும் கெனெடி சாலையின் அருகே உள்ள உணவகத்தில் அதிகாலை 2.45 மணியளவில் தீ ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

அப்போது உள்ளே இருந்த ஊழியரின் கூற்றுப்படி, சந்தேகத்திற்கிடமான ஒரு குழுவினர் வலுக்கட்டாயமாக வணிகத்திற்குள் நுழைந்து, கட்டடத்தின் முன்பாக பெட்ரோல் ஊற்றி தீ வைத்து விட்டதாக கூறப்படுகிறது.

மூன்று சந்தேகநபர்கள் இடத்தை விட்டு தப்பி ஓடுவது அவதானிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் எல்லா ஊழியர்களும் பாதுகாப்பாக வெளியேறி விட்டனர் என்றும் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

தீயால் உணவகம் முழுவதும் சேதமடைந்தது. இருப்பினும் தீயணைப்பு வீரர்கள் அருகிலுள்ள வணிக நிறுவனங்களுக்கு தீ பரவாமல் தடுப்பதில் வெற்றி பெற்றுள்ளனர்.

தீவைக்கும் செயல் பின்னணியில் உள்ள மூலம் இதுவரை தெரியவில்லை, ஆனால் இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# டொரண்டோவில் இஸ்ரேலை ஆதரிக்கும் நடைபயணத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு

வருடாந்த யூனைட்டெட் ஜூயிஷ் அபீல் 'வோக் வித் இஸ்ரேல்' நிகழ்வை முன்னிட்டு, டொரண்டோவில் கடுமையான பொலிஸ் பாதுகாப்பு மேற்கொள்ளப்பட உள்ளதாக நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வு 56 ஆவது ஆண்டு அனுஷ்டிப்பாக நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. "நிகழ்வு பாதுகாப்பாகவும், குறுக்கீடுகளின்றியும் நடைபெறும் என நம்புகிறோம்," என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த பாதுகாப்பு நடவடிக்கையில், மற்ற ரொறன்ரோ பெரும்பாக பகுதி பொலிஸாரும், ஒன்டாரியோ மாகாண பொலிஸாரும் பங்கேற்கவுள்ளனர்.

வட யார்க்கில் உள்ள சுமார் நான்கு கிலோ மீற்றர் பாதையில், சுற்றுவட்டார பகுதியில் பொலிசார் கடமையில் அமர்த்தப்பட உள்ளனர். சிலர் இந்த நிகழ்வை குழப்ப திட்டமிட்டிருப்பதை பொலிஸா அறிவதாக போக் தெரிவித்தார்.

"அமைதியான கூட்டங்கள் மற்றும் கருத்துப் பரப்பலுக்கான உரிமையை பாதுகாக்கிறோம். ஆனால், அச்சுறுத்தல், தொந்தரவு, வன்சொற்கள் அல்லது குற்றச்செயல்கள் என்பனவற்றுக்கு இடமளிக்கப்படாது என தெரிவித்துள்ளனர்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ணையில் மூன்று வாரங்கள் கழிந்தும் அவர்கள் குறித்து எந்த ஆதாரமும் பொலிஸாருக்கு கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

6 வயதான லில்லி சுலிவன் மற்றும் 4 வயதான ஜாக் சுலிவன் ஆகிய இருவரும் மே 2 ஆம் திகதி காலை தங்கள் வீட்டை விட்டு வெளியேறியிருப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அன்று காலை 10 மணிக்கு அவசர அழைப்பு (911) ஒன்று வந்ததாகவும் அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 160க்கும் மேற்பட்ட பயிற்சி பெற்ற தொண்டர்கள், மோப்ப நாய்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் வெப்பத் தடயங்களை கண்டறியும் ட்ரோன்கள் உதவியுடன் வனப் பகுதிகளில் ஐந்து நாட்கள் விரிவான தேடல் நடத்தப்பட்டது.

ஹலிபாக்ஸிற்கு 140 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மலை மற்றும் அடர்ந்த காடுகள் கொண்ட பகுதியில் 5 சதுர கிலோ மீற்றருக்கும் மேல் தேடப்பட்டது.

மே 7ஆம் திகதி, குழந்தைகள் காட்டில் இவ்வளவு நாள் உயிருடன் இருப்பது சாத்தியமில்லை என பொலிஸார் தெரிவித்ததுடன், தேடல் வேகத்தைக் குறைத்தது.



அதே நாளில், காணாமல் போன குழந்தைகளின் தவிர்க்க முடியாத நபராகக் கருதப்படும் டேனியல் மார்டெல், விசாரணைக்கு தானாகவே சென்று நான்கு மணி நேரம் விசாரணை பெற்றதாக தெரிவித்தார்.

"நான் 100 சதவீதம் ஒத்துழைக்கிறேன்," என அவர் கூறினார். "என் கைப்பேசியைக் கொடுத்தேன், மது போதை மற்றும் பொய்ப்பரிசோதனைகளுக்கும் சம்மதித்தேன்." மே 8 மற்றும் 9 ஆம் திகதிகளில், பொலிஸார் அருகிலுள்ள குளங்கள் மற்றும் ஆறுகளை தேடினர்.

மே 13 ஆம் திகதி, குடும்பத்தினரும் உள்பட பலர் உத்தியோகபூர்வமாக விசாரணைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

குழந்தைகள் கடத்தப்பட்டதற்கான எந்த ஆதாரமும் இதுவரை இல்லை என அதிகாரிகள் பலமுறை உறுதிப்படுத்தியுள்ளனர்.

கடந்த வார இறுதியில், 100க்கும் மேற்பட்ட தேடுதல் மற்றும் மீட்பு தொண்டர்கள், குழந்தைகள் காணாமல் போன வீடு அருகிலுள்ள பகுதிகளில் மீண்டும் தேடல் நடத்தினர்.